

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

2022

ශ්‍රී ලංකාවේ ජාතික බුද්ධිමය දේපළ කාර්යාලය

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

National Intellectual Property Office of Sri Lanka

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2022

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

அ.நி.சு. 02/2020 வழிகாட்டல் இலக்கம் 14 மற்றும் அ.நி.சு. 01/2020 வழிகாட்டல் இலக்கம் 05 மாதிரிகளுக்கு அமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தாபனத்தின் பெயர் : தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – தாபன ரீதியான கண்ணோட்டம்	1-8
அத்தியாயம் 02 – செயலாற்றுகை மற்றும் தொலை நோக்கு	9-26
அத்தியாயம் 03 – வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகை	27-52
அத்தியாயம் 04 – செயலாற்றுகைக் குறிகாட்டி	53
அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை	54-55
அத்தியாயம் 06 – மனித வளக் கண்ணோட்டம்	56-60
அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை	61-79
அத்தியாயம் 08- 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள்	80-81

1. தாபன ரீதியான கண்ணோட்டம்

1.1 அறிமுகம்

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு உள்ள இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திடம் இலங்கையின் புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பினை நிருவகித்தல் தொடர்பான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

எந்தவொரு நாட்டிலும் மொத்தப் பொருளாதார அபிவிருத்தியின் போது, விஷேடமாக அறிவு பிரதான வகையில் முனைப்பாகவும் மற்றும் நிச்சயமான வகையிலும் முக்கியத்துவம் பெறும் தற்கால சூழ்நிலையில் புலமைச் சொத்துக்கள் அத்தியாவசியமான மற்றும் விஷேடமான கடமைப் பொறுப்பு ஒன்றினை மேற்கொள்கின்றது. மானிட முயற்சிகள் செயற்படுத்தப்படும் ஒவ்வொரு துறையிலும் முதலீடு, புத்தாக்கம் மற்றும் ஆக்கபூர்வமான செயற்பாடு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் அறிவுப் பாய்ச்சலின் தேவைப்பாடு என்பனவற்றை வரலாற்றின் எக்காலத்திலும் பார்க்க தற்காலத்தில் இலங்கையிலும் உணர ஆரம்பித்துள்ளனர். மீளாய்விற்கு உட்படுத்தப்படும் 2022 ஆம் ஆண்டில் இலங்கை புலமைச் சொத்துக்களின் நிருவாகத்திற்காக தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான சுருக்கமான விபரம் ஒன்று மேற்படி அறிக்கையின் மூலம் முன்வைக்கப்படுகின்றது.

அதற்கே உரித்தான விஷேடமான பண்புகளைக் கொண்ட புலமைச் சொத்துக்களை ஒரு வகைச் சொத்தாக அடையாளம் காண முடியும். மனிதனின் அறிவினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான பணிக்காக எழும் சட்ட ரீதியாக அமுல்படுத்தக் கூடிய உரிமைகளின் தொகுதி புலமைச் சொத்துக்களாகக் கொள்ளப்படும். இலக்கியம், கலை அல்லது விஞ்ஞான ரீதியான பணிகள், சமகாலக் கலைஞர்களின் நாடகக் காட்சி நிகழ்ச்சிகள், ஒலிப்பதிவு வட்டுக்கள்,ஒலிபரப்புதல்கள், புத்தாக்கங்கள்,கைத்தொழில் வடிவமைப்புக்கள், வியாபாரச் சின்னங்கள், சேவைச் சின்னங்கள், வர்த்தகப் பெயர்கள் மற்றும் பதவிகள், அநீதியான போட்டிக்கு எதிரான பாதுகாப்பு, புவியியல் குறிகாட்டிகள், புதிய தாவரக் குறிகாட்டிகள், வெளிப்படுத்தப்படாத தகவல்கள் மற்றும் இணைந்த சுற்றுக்களின் அமைப்புத்திட்ட வடிவமைப்புக்கள் போன்ற துறைகளுக்கு உரிய உரிமைகள் இதில் உள்ளடங்கும். நபர்களினால் உரிமைகள் வகிக்கப்படும் ஏனைய சொத்துக்களை சார்ந்த வகையில் காணப்படும் சில பண்புகள் புலமைச் சொத்துக்களுக்கும் பொதுவானதாகும். உதாரணமாக, புலமைச் சொத்து என்பது ஒரு வகை சொத்தாகும் என்பதுடன் அதற்கு நிதிப் பெறுமதி ஒன்றும் காணப்படும். ஏனைய எந்தவொரு வகையான சொத்தினைப் போலவே புலமைச் சொத்திற்கும் உரித்தாக்குதல், மற்றைய தரப்பினருக்கு உரித்தினை ஒப்படைத்தல், விற்பனை செய்தல் அல்லது அனுமதிப்பத்திரங்களைக் கைச்சாத்திடல் ஆகியவற்றினை மேற்கொள்ள முடியும். புலமைச் சொத்தினை அடையாளம் காணல் அல்லது அதன் பௌதீக நிலையளவின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் என்பவற்றினை மேற்கொள்ள முடியாமையினால் புலமைச் சொத்து தொட்டு உணர முடியாத ஒரு சொத்தாகும். அவ்வாறாயினும், புலமைச் சொத்தினைப் பாதுகாப்பதற்காக அதனைத் தெளிவான விதத்திலோ அல்லது முறையிலோ திட்டவட்டமாகக் கூறுதல் வேண்டும்.

கைத்தொழில் சொத்துக்கள் மற்றும் வெளியீட்டு உரிமைகள் என்ற வகையில் புலமைச் சொத்துக்கள் பிரதான வகையில் இரு வகைகளாகப் பிரிக்கப்படும். அவையாவன,

1. புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள், வியாபாரச் சின்னங்கள் மற்றும் சேவைச் சின்னங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள் மற்றும் புவியியல் குறிகாட்டிகள் என்பன உள்ளடங்கிய **கைத்தொழில் சொத்துக்கள்** மற்றும்
2. கல்வியியல் மற்றும் கலை சார் படைப்புக்களைத் தழுவும் வெளியீட்டு உரிமை, தற்காலக் கலைஞர்களின், ஒலிப் பதிவுகள் அல்லது ஒலிப்பதிவு வட்டுக்கள் தயாரிப்பாளர்களின் மற்றும் ஒளிபரப்பு அமைப்புக்களின் உரிமைகள் **தொடர்புடைய உரிமைகள் அல்லது அயல் உரிமைகள்** என அழைக்கப்படும்.

1.2 தாபனத்தின் தொலை நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

தொலை நோக்கு

சந்தையினை மையமாகக்கொண்ட புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பு ஒன்றினை நாட்டிற்கு உரித்தாக்கிக் கொடுக்கும் அபிப்பிராயத்துடன் உயர் தரத்தினை நோக்காகக் கொண்ட விளைதிறன் மிக்க சேவைகளை வழங்கும் முதற்தர அரச நிறுவனம் என்ற நிலையினை அடைதல்.

செயற்பணி

புலமைச் சொத்துக்களின் ஆக்கம், பாதுகாப்பு மற்றும் வர்த்தகமயமாக்கம் என்பவற்றின் ஊடாக பொருளாதார நிலைபேற்றுத் தன்மையினை ஊக்குவிக்கும் புலமைச் சொத்துக்கள் கட்டமைப்பு ஒன்று தாபிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

நோக்கங்கள்

i. நாட்டு மக்களின் ஆக்கபூர்வத் தன்மையினை மேம்படுத்தல்.
ii. வியாபார நடவடிக்கைகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
iii. முதலீட்டு ஊக்குவிப்பு
iv. நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அறிவினை முதன்மையாகக் கொண்ட உலகளாவிய நடவடிக்கைகளுடன் தேசிய பொருளாதாரத்தினை ஒன்றிணைத்தல்.


1.3. பிரதான பணிகள்

- வியாபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள், கைத்தொழில் வடிவமைப்புக்கள் என்பவற்றினைப் பதிவு செய்தல் மற்றும் ஒன்றிணைந்த முகாமைத்துவ சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் நிருவகித்தல் உட்பட புலமைச் சொத்துக்களை நிருவகித்தல்.
- புலமைச் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பிரபல்யம் செய்தல்.
- புலமைச் சொத்து விடயம் தொடர்பான அறிவினை விருத்தி செய்தல்.
- பொருளாதார விருத்திச் செயற்பாட்டிற்காக புலமைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதனை விருத்தி செய்தல்.
- புலமைச் சொத்துக்கள் சார் இலங்கையின் சர்வதேச பொறுப்பினை நிறைவேற்றல் மற்றும் அது தொடர்பான வலய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.
- புலமைச் சொத்துக்கள் தொடர்பான கொள்கைகளை முன்மொழிதல்.
- வெளியீட்டு உரிமை மற்றும் தொடர்புடைய உரிமைகள் தொடர்பான துறையில் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், புலமைச் சொத்துக்கள் தொடர்பான உரிமைகளை அமுல்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல் .
- புலமைச் சொத்துக்கள் முகவர்களைப் பதிவு செய்தல் மற்றும் நிருவகித்தல்.

1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு

ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு

தேசிய புலமைச் சொத்து அலுவலகம்



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்



1.5.1 வியாபாரச் சின்னங்கள் பிரிவு தொடர்பான அறிமுகம்

புலமைச் சொத்துக்களின் கீழ் கைத்தொழில் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு உள்ள வியாபாரச் சின்னங்கள் மற்றும் சேவைச் சின்னங்கள் என்பவற்றினைப் பதிவு செய்வதன் ஊடாக வியாபாரச் சின்னங்கள் பிரிவினால் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் மிகவும் முக்கியமான சேவை ஒன்று வழங்கப்படுகின்றது.

பணிப்பாளர் (சட்டம்) அவர்கள் மேற்படி பிரிவிற்குத் தலைமை வகிப்பதுடன், மூன்று உதவிப் பணிப்பாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், ஐந்து புலமைச் சொத்து உத்தியோகத்தர்கள், பன்னிரெண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலகப் பணியாளர் சேவையிலுள்ள ஒரு உத்தியோகத்தர் மற்றும் பல் பணிச் சேவைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தற்காலிகமாக இணைக்கப்பட்டு உள்ள ஒரு உத்தியோகத்தர் ஆகியோரினை உள்ளடக்கிய பதவியணி ஒன்றினால் மேற்படி பிரிவின் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வியாபாரச் சின்னம் ஒன்றிற்காக முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் ஒன்று அதனைப் பதிவு செய்தல் மற்றும் மீண்டும் புதுப்பித்தல் வரையான சிக்கலான நடைமுறை ஒன்றிற்கு உட்படுவதுடன் மேற்படி செயற்பாட்டினை கீழே குறிப்பிடப்பட்டு உள்ள வகையில் குறிப்பிடப்பட முடியும்.

- சட்டத்தின் 106-110 வரையான பிரிவுகளுக்கு ஒத்தியங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளதா என்பதனை உறுதிப்படுத்துக் கொள்வதற்காகப் பரீட்சித்தல்.
- அடிப்படையில் பிரதான பிழைகள் இல்லாத விண்ணப்பங்கள், சட்டத்தின் 103 மற்றும் 104 ஆம் பிரிவுகளின் கீழ் தேடல் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டு சின்னத்தினை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் கடிதங்களை வழங்குதல்.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட வியாபாரச் சின்னங்களை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக உரிய வர்த்தமானி அறிவித்தல்களைத் தயாரித்தல்.
- ஒரு தரப்பு / இரு தரப்பு விசாரணைகளை நடாத்துதல்.

- சின்னம் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர், எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டு இருக்காத, உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, வியாபாரச் சின்னங்களைப் பதிவு செய்வதற்காக முன்வைத்து பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல்.
- குறித்துரைக்கப்பட்டு உள்ள காலப்பகுதியில் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் பின்னர் 10 வருடங்களுக்கு ஒரு முறை பதிவினைப் புதுப்பிப்பதற்கான சான்றிதழ்களை வழங்குதல்.
- வியாபாரச் சின்ன ஒப்படைப்புக்கள், பெயர்/ முகவரி மாற்றல்கள் மற்றும் அனுமதிப்பத்திர ஒப்பந்தங்களை அறிக்கையிடுதல்.
- புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி அவர்கள் சார்பில் நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுமாறு சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் கோரிக்கை விடுத்தல் மற்றும் அதனோடு தொடர்பான ஆவணங்கள் மற்றும் சான்றுகளை அவர்களுக்கு வழங்குதல் மற்றும் வியாபாரச் சின்னங்கள் சார் பிரச்சினைகளின் போது உரிய அரச தாபனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வியாபாரச் சின்னங்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டல்களுக்கு உரிய கருத்தரங்குகள் / செயலமர்வுகள் / கூட்டத்தொடர்கள் / கண்காட்சிகள் ஆகியவற்றில் பங்குபற்றல்.
- வியாபாரச் சின்னங்களுக்கு உரிய புள்ளிவிபரவியல் மற்றும் ஏனைய தரவுகளைத் தயாரித்தல் மற்றும் பேணி வருதல் மற்றும் தேவையான தரப்பினர்களுக்கு குறித்த உரிய தகவல்களை வழங்குதல்.

1.5.2 ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவு தொடர்பான அறிமுகம்

ஆக்கவுரிமை விண்ணப்பங்களைப் பரீட்சித்தல், ஆக்கவுரிமை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களைப் பரீட்சித்தல் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்களைப் பதிவு செய்தல் ஆகிய பணிகள் ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவின் பிரதான பணிகள் ஆகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எனும் இரு வகைகளின் கீழ் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திடம் கோப்பிடப்படும் ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்களின் விண்ணப்பங்களைப் பரீட்சிப்பதற்காக இந்தப் பிரிவிற்கு அனுப்பப்படும். அவ்வாறே இலங்கையானது 1982 ஆம் ஆண்டு முதல் ஆக்கவுரிமைகள் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (PCT) உறுப்பு நாடு ஒன்றாவதுடன் மேற்படி ஒப்பந்தத்தின் கீழ் வெளிநாட்டு விண்ணப்பதாரர்களினால் இந்த நாட்டில் பதிவு செய்வதற்காக கோப்பிடப்படும் விண்ணப்பங்களும் இந்தப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்தப் பிரிவில் பணிப்பாளர் (தகவல் மற்றும் பரீட்சிப்புக்கள்) பதவியில் ஒரு உத்தியோகத்தரும், உதவிப் பணிப்பாளர்களாக (தகவல் மற்றும் பரீட்சிப்புக்கள்) இரண்டு உத்தியோகத்தர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 12 பேரும், முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஒருவரும், ஒரு கணினிப் பயிற்சி உத்தியோகத்தரும், அலுவலகப் பணியாளர் ஊழியர் ஒருவரும் பணிபுரிகின்றனர்.

இந்தப் பிரிவு ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களைப் பேணி வருவதுடன் புலமைச் சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உரிய தகவல்களை சாதாரண பொதுமக்கள், பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தரப்பினர்களுக்கு இடையில் பகிர்ந்தளிக்கும் பொறுப்பினையும் வகிக்கின்றது.

1.5.3 தகவல் தொழில்நுட்பப் பிரிவு தொடர்பான அறிமுகம்

புலமைச் சொத்துக்கள் நடைமுறையின் பல்வேறு படிமுறைகளுக்கும் உரிய வகையில் புலமைச் சொத்து அலுவலகத்தின் கணினிக் கட்டமைப்பாகிய கைத்தொழில் சொத்துக்களின் நிருவாகக் முறைமையினை (IPAS-Industrial Property Administrative System) இற்றைப்படுத்தல், விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது கணினி முறைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல், இணையத் தளத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல் என்பன தகவல் தொழில்நுட்பப் பிரிவின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன. பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் பரீட்சிப்புக்கள்) தலைமை வகிக்கும் மேற்படி பிரிவானது, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரையும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவரையும் உள்ளடக்கி உள்ளது.

1.5.4 தாபனப் பிரிவு தொடர்பான அறிமுகம்

மேற்படி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள கடமைப் பொறுப்பினை வினைத்திறனுடனும் மற்றும் விளைதிறனுடனும் நிறைவேற்றுவதற்காக அலுவலர் குழாத்தினை இணைத்துக்கொள்ளல், பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ஆகிய பணிகளை நிறைவேற்றுவதன் ஊடாக தாபனத்தின் மொத்த விளைதிறனினை விருத்தி செய்வதற்காக தாபனப் பிரிவினால் கூடிய பங்களிப்பு ஒன்று வழங்கப்படுகின்றது. பெண் நிருவாக உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்பார்வை செய்யப்படும் மேற்படி பிரிவு மொழிபெயர்ப்பு உத்தியோகத்தர் ஒருவரையும், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரையும், நான்கு முகாமைத்துவ உதவியாளர்களையும், சாரதிகள் நான்கு பேரினையும் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் இரண்டு பேரினையும் உள்ளடக்கி உள்ளது.

1.5.5 கணக்குகள் பிரிவு தொடர்பான அறிமுகம்

மேற்படி திணைக்களத்திற்குக் கிடைக்கும் சகல வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களை உரிய வகையில் வகைப்படுத்தி சரியான முறையில் கணக்குகளில் சேர்த்தல், அலுவலக உத்தியோகத்தர்களின் சம்பள ஊதியங்களை வழங்குதல் மற்றும் புலமைச் சொத்து நிதியத்தின் நடவடிக்கைகள், தாபனத்தின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடல், பெறுகை நடவடிக்கைகள் மற்றும் புலமைச் சொத்து நிதியத்தின் நிதிய முகாமைத்துவம் என்பன கணக்குகள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள பிரதான பணிகளாகும். மேற்படி கிளையில் கணக்காளரின் கண்காணிப்பின் கீழ் 09 உத்தியோகத்தர்களும் மற்றும் அலுவலகப் பணியாளர் ஒருவரும் சேவையில் ஈடுபட்டு உள்ளனர்.

1.5.6 திட்டமிடல் பிரிவு தொடர்பான அறிமுகம்

நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக் கூற்றுக்களுக்கு ஒத்தியங்கும் வகையில், நோக்கங்களை செயற்படுத்துவதற்கான உபாயமார்க்கத் திட்டத்தினைத் தயாரித்தல், நிறுவனத்தின் சாத்திய வளம் மற்றும் அடையாளம் காணப்பட்ட உள்ளார்ந்த அபிவிருத்தி ஆற்றல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனத்தின் விஷேட இலக்குகளை செயற்படுத்துவதற்கான வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தினைத் தயாரித்தல், அதற்கு ஒத்தியங்கும் வகையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்தல், மேற்பார்வை மற்றும் பின்னாய்வு என்பவற்றினை மேற்கொள்ளல், செயலாற்றுகையினைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல், விஷேடமாக உலகப் புலமைச் சொத்து அலுவலகத்திடம் (WIPO) சமர்ப்பிக்கப்பட வேண்டிய புள்ளிவிபரவியல் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகளை தேவையான பகுப்பாய்வுகளுடன் முன்வைத்தல், சேவை பெறுநர் பட்டயத்தினை நிறுவனத்தில் தாபித்தல் என்பவற்றின் மூலம் நிறுவனத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை விருத்தி செய்தல், அதனூடாக நிறுவனம் சார் விளைதிறனை விருத்தி செய்தல், நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையுடன் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல், நிறுவனத்தின் இலக்குகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை அடையாளம் காணல், அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உரிய கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் பரிந்துரைகளை முன்வைத்தல், பெறுகைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குதல், என்பன திட்டமிடல் பிரிவின் கடமைப் பொறுப்பாகக் குறிப்பிட முடியும்.

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் திட்டமிடல் பிரிவு, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஒருவரையும் மற்றும் இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய ஓர் அலகாகும்.

1.6 திணைக்களத்தின் கீழ் நிலவும் நிதியங்கள்

- ✓ அரச திரட்டு நிதியம் – தலைப்பு 299
- ✓ புலமைச் சொத்து நிதியம்

1.7 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்

- × இல்லை

2. செயலாற்றுகை மற்றும் தொலை நோக்கு


நிதி முன்னேற்றம்

வருமானம்

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2022.12.31 ஆம் திகதியன்று மொத்த வருமானம் ரூ.மி. 278.57 ஆகும். அதில் 58% தொகை புலமைச்சொத்து நிதியத்தின் மிகையினை முதலீடு செய்தமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ஆகும் என்பதுடன் எஞ்சிய 42% புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழான கட்டண அறவீடுகள், மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ஆகும்.

புலமைச் சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஈட்டப்படும் வருமானங்களின் 1/3 பகுதி ஒன்றை அரச திரட்டு நிதியத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன், 2022.12.31 ஆம் திகதி ஆகும் போது குறித்த வருடத்திற்காக அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட தொகை ரூ.மி. 38.97 ஆகும்.


வரைபு 1 : 2022.12.31 ஆம் திகதியன்று மொத்த வருமானம் (ரூ.மி.)



செலவு

புலமைச் சொத்து நிதியத்தை நிருவகிக்கும் நடவடிக்கைகளுக்காக தேசிய புலமைச் சொத்து அலுவலக உத்தியோகத்தர்களின் ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக தலைப்பு இலக்கம் 299 இன் கீழ் அரசினால் ரூ.மி. 46.25 தொகை ஒதுக்கீடு ஏற்கப்பட்டு உள்ளது. எஞ்சியுள்ள சகல செலவினங்களும் புலமைச் சொத்து நிதியத்தினால் ஏற்கப்பட்டு உள்ளது. 2022.12.31 ஆம் திகதியன்று புலமைச் சொத்து நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டு உள்ள மொத்தத் தொகை ரூ.மி. 65 ஆகும்.

வரைபு 2 : 2022.12.31 ஆம் திகதியன்று மொத்தச் செலவு (ரூ.மி.)



2.1 வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

அட்டவணை - 1 : 2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான வியாபாரச் சின்னங்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

செயற்பாடுகள்		நிறைவேற்றப்பட்ட பணிகள்		
		மதிப்பீடு செய்யப்பட்ட (புள்ளிவிபரவியல் ரீதியாக)	உண்மையான (புள்ளிவிபரவியல் ரீதியாக)	%
1	வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்	10073	9466	94%
2	புத்தாக்கம் தொடர்பான பரீட்சிப்புக்கள்	10073	6414	64%
3	சின்னங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நிராகரித்தல் தொடர்பான கடிதங்களை வழங்குதல்	10073	10877	108%
4	வியாபாரச் சின்னங்கள் தொடர்பான அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல்	9795	5788	59%
5	வியாபாரச் சின்னங்களின் பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல்	7450	3643	49%
6	பதிவினைப் புதுப்பித்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை	4333	3473	80%
7	ஒப்படைப்புக்களை பதிவு செய்து வைத்தல்	1538	1400	91%
8	பெயர்/முகவரி என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களை பதிவு செய்து வைத்தல்.	2551	2016	79%


பிரதான 3 செயற்பாடுகளின் கீழ் வியாபாரச் சின்னங்கள் பிரிவின் செயலாற்றுகையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

2.1.1 கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீடு

அட்டவணை - 2 : கிடைக்கப்பெற்றுள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2018	2019	2020	2021	2022
கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை	11,483	10,385	9,593	9,947	9466
தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	6,542	10,224	12,551	4,989	6414

வரைபு - 3 : கிடைக்கப்பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை - 2 மற்றும் வரைபு - 3 மூலம் 2022 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்று உள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீட்டினை எடுத்துக் காட்டுகின்றது

மேற்படி வரைபிற்கு அமைய 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் கிடைக்கப்பெற்றுள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் படிப்படியான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்படுகின்றது. அதற்கு அமைய கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை தேசிய பொருளாதாரத்தில் நிலவும் நிலைமை தொடர்பில் கூருணர்வான குறிகாட்டி ஒன்றாக அமைகின்றது என்பதனையும் அவதானிக்க முடிகின்றது. எடுத்துக் காட்டப்படுவதுடன்


பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் தெட்டத் தெளிவான ஏற்ற இறக்கம் ஒன்று அவதானிக்கப்படுவதுடன் அது அந்தந்த வருடங்களில் தாபனத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட கருத்திட்டங்கள் காரணமாக சில செயற்பாடுகள் தொடர்பில் வெளிக்காட்டப்பட்ட முன்னுரிமைகளின் மாற்றத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள நிலைமை ஒன்று என விளக்க முடியும்.

2.1.2 கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீடு

அட்டவணை - 3 கிடைக்கப் பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடும் போது பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2018	2019	2020	2021	2022
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	11,483	10,385	9,593	9,947	9466
பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	5,192	14,993	5,932	3,848	3643

வரைபு - 4 : கிடைக்கப் பெற்ற வியாபாரச் சின்ன விண்ணப்பங்களுடன் ஒப்பிடும் போது பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை - 3 மற்றும் வரைபு - 4 என்பவற்றின் மூலம் 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு இடையிலான ஒப்பீடு எடுத்துக் காட்டப்படுகின்றது.


இதன் போது தாபனத்தில் விஷேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியமையின் அடிப்படையில் மாற்றம் அடைந்த முன்னுரிமைகள் மற்றும் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் தாக்கத்தின் அடிப்படையில் வரையருக்கப்பட்டு வகையில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் என்பவற்றின் மூலம் தோன்றிய பெறுபேறுகளை அவதானிக்க முடியும். மேலும் வியாபாரச் சின்னங்கள் பிரிவின் அலுவலர் குழாத்தில் புலமைச் சொத்து உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி வியாபாரச் சின்னங்கள் பிரிவின் செயலாற்றுகை மீது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளமையினையும் இதனூடாக விளங்கிக் கொள்ள முடியும்.

2.1.3. பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை- 4 : பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

	2018	2019	2020	2021	2022
உள்நாட்டுச் சின்னங்கள்	1998	5250	2442	2734	1850
வெளிநாட்டுச் சின்னங்கள்	3194	9743	3590	2729	1792

வரைபு - 5 : பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்



அட்டவணை - 4 மற்றும் வரைபு - 5 என்பவற்றின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்று உள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்திக் காட்டப்பட்டு உள்ளது.

மேற்படி வரைபுகளின் மூலம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் முதலிடம் 2021 ஆம் ஆண்டின் பின்னர் நிறைவடைந்து உள்ளமை அவதானிக்கப்படுகின்றது. அவ்வாறே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆகிய இரு வகையான விண்ணப்பங்களிலும் ஒப்பீட்டு அளவில் வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்படுகின்றது. .

வெளிநாட்டு வியாபாரச் சின்னங்கள் இந்நாட்டில் பதிவு செய்வது தவிர்க்கப்பட்டு உள்ளது என்பதனையும், இதற்கு அமைய கிடைக்கப்பெறும் வியாபாரச் சின்ன விண்ணப்பங்களின் எண்ணிக்கை சர்வதேச பொருளாதாரத்தில் நிலவும் நிலைமைக்கு கூருணர்வான குறிகாட்டி ஒன்றாகும் என்பதனையும் தீர்மானிக்க முடியும்.

2.2 ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

அட்டவணை - 5 : 2021.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை

செயற்பாடுகள்		பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்)		
		மதிப்பீடு செய்யப்பட்ட	உண்மையான	%
1	ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்	575	431	75%
2	விண்ணப்பங்கள் தொடர்பான ஆரம்பப் பரீட்சிப்பு (உள்நாட்டு ரீதியில்/ சர்வதேச ரீதியில் / ஆக்கவுரிமைகள் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (PCT) கீழ் கோப்பிடப்பட்ட விண்ணப்பங்கள்)	575	1058	184%
3	புத்தாக்கம் தொடர்பான பரீட்சிப்புக்கள் (விண்ணப்பம் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்கும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து உள்ளதா எனப் பரீட்சித்தல்)	960	1211	126%
4	வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக ஜேர்னல்களைத் தயாரித்தல்	4	12	300%
5	ஆக்கவுரிமைகள் தொடர்பான அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்தல்	200	246	123%
6	ஆக்கவுரிமைச் சான்றிதழ்களைத் தயாரித்தல்	200	189	95%
7	பதிவு புதுப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	530	563	106%
8	பொது மக்களுக்கான தகவல்களை வழங்குதல்/ உள்நாட்டுத் தரவுத் தொகுதியினுள்ளே சென்று தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்	100	614	614%


பிரதான 3 செயற்பாடுகளின் கீழ் ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

2.2.1 கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 6 : கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2018	2019	2020	2021	2022
கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை	603	611	603	539	431
தேடல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	1,059	1,117	922	1084	1211

வரைபு - 6 : கிடைக்கப்பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை - 6 மற்றும் வரைவு - 6 என்பவற்றின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி வரைபின் முலம் 2018 முதல் 2022 வரை கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் படிப்படியான வீழ்ச்சி ஒன்றினை அவதானிக்க முடியும். இதற்கு அமைய, முன்வைக்கப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை, நாட்டின் பொருளாதார நிலைமைக்கு கூருணர்வாகி உள்ளது என்பதனை அனுமானிக்க முடியும். .


மேற்படி வரைபின் மூலம் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட தேடல் பரீட்சிப்புக்களின் எண்ணிக்கையில் படிப்படியான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்படுவதுடன் அதற்கு அமைய ஆக்கவுரிமைகள் பிரிவில் நிலவும் மேற்கொள்ள இயலாமல் போயுள்ள பணிகளின் எண்ணிக்கையினை எதிர்வரும் வருடத்தில் முழுமையாக இற்றைப்படுத்திக் கொள்ள முடியும் என்பதனை எதிர்பார்க்க முடியும்.

2.2.2. கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 7 : கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2018	2019	2020	2021	2022
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	603	611	604	539	431
ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	212	175	273	194	189

வரைபு - 7 : கிடைக்கப்பெற்ற ஆக்கவுரிமை விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை - 7 மற்றும் வரைபு -7 என்பவற்றின் ஊடாக 2022 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன.


மேற்படி வரைபின் மூலம் வருடாந்தம் புள்ளிவிபரவியல் ரீதியாக குறைந்து வரும் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறல் தொடர்பில் பார்க்கும் போது கிட்டதட்ட ஒரேயளவில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் ஒப்பீட்டு ரீதியில் காலம் செல்லும் செயற்பாடு ஒன்றாகையினால், முன்னைய வருடத்தில் கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களுடன் ஒப்பிடும் போது வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையினை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் படிப்படியான விருத்தி ஒன்றினை அவதானிக்க முடிகின்றது. அதற்கு அமைய ஆக்கவுரிமைகள் பிரிவில் மேற்கொள்ள முடியாமல் போன பணிகளின் எண்ணிக்கையினை எதிர்வரும் வருடத்தில் சீர்செய்து கொள்வதற்கு இயலுமாகும் என்பதனை எதிர்பார்க்க முடியும்.

2.2.3 ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை - 8 : பதிவு செய்யப்பட்ட ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்.

ஆண்டு	2018	2019	2020	2021	2022
உள்நாட்டு	64	39	47	66	80
வெளிநாட்டு	148	136	226	128	109

வரைபு - 8 : ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்



அட்டவணை - 8 மற்றும் வரைபு – 8 என்பவற்றின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்றுள்ள ஆக்கவுரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வெவ்வேறாக எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது.

2020 ஆம் ஆண்டு ஆகும் போது உச்சத்தை அடைந்து இருந்த வெளிநாட்டு ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுதல் தொடர்பில் படிப்படியான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்படுவதுடன் உள்நாட்டு விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் ஒப்பீட்டு ரீதியான விருத்தி ஒன்று தென்படுகின்றது. அதற்கு அமைய சுருக்கம் அடைந்துள்ள தேசிய பொருளாதாரத்தில் வெளிநாட்டுப் படைப்பாளிகளின் வெளியேற்றம் ஒன்றும் மற்றும் உருவாகும் சந்தர்ப்பங்களுக்காக உள்நாட்டு படைப்பாளிகளின் ஒப்பீட்டு ரீதியான கூடிய ஈர்ப்பு ஒன்றும் நிலவுவதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 189 ஆகக் காணப்படுவதுடன் அதில் உள்நாட்டு ஆக்கவுரிமை வழங்கல் 80 ஆகும். மேற்படி எண்ணிக்கை

2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஒரு வருடத்திற்குள் வழங்கப்பட்ட ஆகக் கூடிய உள்நாட்டு ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை ஆகும்.

2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உள்நாட்டு ஆக்கவுரிமை வழங்கல்கள் 80 இல், 27, 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்காகவும், 22, 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்காகவும், 12, 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்காகவும், 09, 2018 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்காகவும், 10, 2011-2017 வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்காகவும், வழங்கப்பட்டு உள்ளன.

மேலும், 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஆக்கவுரிமை வழங்கல்கள் 80 இல், 41 வழங்கல்கள் (51.25%) தனி நபர்களுக்கும், 24 வழங்கல்கள் (30%) அரச பல்கலைக்கழகங்களுக்கும், 15 வழங்கல்கள் (18.75%) தாபனங்களுக்கும் வழங்கப்பட்டு உள்ளன.

2.3 கைத்தொழில் வடிவமைப்புக்கள் சார் பணிகளின் செயலாற்றுகை

அட்டவணை - 9 : 2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான ஆக்கவுரிமைகள் சார் பணிகளின் செயலாற்றுகை


செயற்பாடுகள்		பௌதீகச் செயலாற்றுகை (நிறைவேற்றப்பட்ட பணிகள்)		
		மதிப்பீடு செய்யப்பட்ட	உண்மையான	%
1	கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறல்	250	159	64%
2	விண்ணப்பங்களுடன் தொடர்பான ஆரம்பப் பரீட்சிப்பு (உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான விண்ணப்பங்கள்)	250	321	128%
3	விண்ணப்பங்களின் தேடல் பரீட்சிப்பு	4	151	60%
4	வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான ஜேர்னல்களைத் தயாரித்தல்	150	7	175%
5	கைத்தொழில் வடிவமைப்புக்களுடன் தொடர்பான அறிவித்தல்களை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்	150	176	117%
6	கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய சான்றிதழ்களைத் தயாரித்தல்	250	96	64%
7	பதிவு புதுப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	50	121	48%
8	பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்/ உள்நாட்டுத் தரவுத் தொகுதி ஒன்றிற்குள் பிரவேசித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.	250	221	442%

2.3.1 கிடைக்கப் பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 10 :கிடைக்கப் பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2018	2019	2020	2021	2022
கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	288	546	281	139	159
தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	242	449	288	164	151

வரைபு - 9 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் தேடல் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை - 10 மற்றும் வரைபு -9 என்பவற்றின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்குரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களின் எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன.

தற்போதைய பொருளாதாரப் பின்னடைவின் அடிப்படையில் அளவு சார் ரீதியில் குறைவடைந்து இருந்த கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களைக் கோப்பிடும் எண்ணிக்கையில் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சிறு விருத்தி ஒன்றினை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறே முன்வைக்கப்பட்ட சகல விண்ணப்பங்களும் போல் தேடல் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டு இருத்தலின் மூலம் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவு அதியுயர் செயலாற்றுகை ஒன்றினை அறிக்கையிட்டு இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

மேலும், 2022 ஆம் ஆண்டு நிறைவடையும் போது இரண்டாம் நிலைப் பரீட்சிப்பிற்காகத் தகைமை பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களுள், 2022 டிசம்பர் மாதம் கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்கள் 02 தவிர ஏனைய அனைத்து விண்ணப்பங்களுக்கும் இரண்டாம் நிலைப்


பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கு கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவிற்கு ஆற்றல் கிடைத்து உள்ளது.

2.3.2. கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை - 11 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	2018	2019	2020	2021	2022
கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	288	546	281	139	159
பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	124	258	151	99	96

வரைபு - 10 : கிடைக்கப்பெற்ற கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை



அட்டவணை – 11 மற்றும் வரைபு -10 என்பனவற்றின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு உரிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்பன எடுத்துக் காட்டப்பட்டு உள்ளன.

தேசிய பொருளாதாரத்தின் பின்னடைவின் அடிப்படையில், முன்வைக்கப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளமையினால் வருடாந்தம் பதிவு செய்யப்படும் கைத்தொழில் வடிவமைப்புக்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி அடைந்து உள்ளமையினை இதன் மூலம் அவதானிக்க முடியும்.

2022 ஆம் ஆண்டிற்குள் பதிவு செய்யப்பட்ட மொத்தக் கைத்தொழில் வடிவமைப்புக்களின் எண்ணிக்கை 96 ஆகக் காணப்படுவதுடன், அதில் 81, 2020-2022 ஆம் ஆண்டில் கோப்பிடப்பட்ட விண்ணப்பங்களாக இருத்தல் விஷேட அம்சமாகும். பதிவு செய்தல்களுள் 13 கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்கள்

2019 ஆம் ஆண்டில் கோப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஆவதுடன், 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் கோப்பிடப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2 ஆகும்.


அதற்கு அமைய கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவில் மேற்கொள்ளப்படாது தேங்கியுள்ள வேலைகளின் அளவு காணப்படுவதில்லை ஆகையினால் அதிகூடிய செயலாற்றுகை ஒன்றினை வெளிக்காட்டுகின்றது என்பதனை அறிந்து கொள்ள முடியும்.

2.3.3 பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்

அட்டவணை - 12 : பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்.

ஆண்டு	2018	2019	2020	2021	2022
உள்நாட்டு	86	198	122	54	74
வெளிநாட்டு	38	60	29	45	22

வரைபு - 11 : பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் வடிவமைப்புக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்தல்.



அட்டவணை - 12 மற்றும் வரைபு - 11 என்பவற்றின் மூலம் 2022 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ள கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வகைப்படுத்திக் காட்டுகின்றது.

மேற்படி வரைபிற்கு அமைய வருடாந்தம் பதிவு செய்யப்படும் மொத்த கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை தீவிரமான முறையில் தளம்பல் அடைகின்றதனை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறெனினும், வெளிநாட்டுக் கைத்தொழில் வடிவமைப்புக்களுடன் ஒப்பிடும் போது உள்நாட்டுக் கைத்தொழில் வடிவமைப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் அதிகூடிய பதிவு செய்தல் ஒன்று தென்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு ஆகும் போது அவதானிக்கப்படும் மிகவும்

குறைவான வெளிநாட்டுக் கைத்தொழில் வடிவமைப்புப் பதிவு செய்தல்களின் எண்ணிக்கை, நாட்டில் எழுந்துள்ள பாதகமான பொருளாதார நிலைமையின் அடிப்படையில் வெளிநாட்டுப் படைப்பாளிகளின் ஆர்வம் குறைந்து செல்கின்றது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

2.4 விஷேட வெற்றிகள்

- **வியாபாரச் சின்னங்கள்**

  வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் வசதிகளை வழங்கும் மெட்ரிட் சாசனப் பத்திரத்திற்குள் பிரவேசிப்பதற்காக உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பிற்கு விண்ணப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதற்கான சட்ட மூலங்கள், உலக புலமைச் சொத்து அலுவலகத்தின் கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் கண்காணிப்புக்கள் சட்ட வரைஞர் திணைக்களத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டு உள்ளன.

- **ஆக்கவுரிமைகள்**

  2022 ஆம் ஆண்டு நிறைவடையும் போது 2020 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்று இருந்த சகல உள்நாட்டு ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களினதும் (2019 ஆம் ஆண்டின் 2 விண்ணப்பங்கள் தவிர) இரண்டாம் நிலைப் பரீட்சிப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புக்கள் பிரிவிற்கு இயலுமாகி உள்ளது.

- **வெளியீட்டு உரிமைகள்**

  உரிமைத் தொகை உரித்தினை இசைத் துறையில் உள்ள கலைஞர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் ஆகக் குறைந்த கட்டணங்கள் குறித்துரைக்கப்பட்ட 2164/70 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகைக்கு அமைய, ரியலிட்டி போட்டிகளின் போது பாடப்படும் பாடல்களின் வெளியீட்டு உரிமைகளுக்காக உரிமைத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்காக மற்றும் கூட்டுச் சங்கங்களில் வைப்புச் செய்யப்பட்டு உள்ள பணத்தை உரிய கலைஞர்களுக்குப் பகிர்ந்தளித்தல் உட்பட சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆய்வுகளுக்காக நியமனம் செய்யப்பட்ட குழுவினால், அதனோடு தொடர்பான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் குறித்த குழுவின் ஆய்வு அறிக்கை ஒன்று அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது.

- **புவியியில் குறிகாட்டிகள்**

  <u>புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்காக புலமைச் சொத்துச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளல்</u>

  புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான ஒழுங்குவிதிகளை, சட்ட வரைஞர் திணைக்களத்திடம் முன்வைப்பதற்காக தாபனத்தினால் வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 2022 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட புலமைச் சொத்து ஆலோசனைச் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. .

- **தொழில்நுட்ப புத்தாக்க ஒத்துழைப்பு நிலையங்கள் (TISC) கருத்திட்டம்** ஆக்கவுரிமைகள் மற்றும் தொழில்நுட்பத் தகவல்களுக்கான பிரவேசத்தினை வழங்கும் நோக்குடன் தொழில்நுட்ப புத்தாக்க ஒத்துழைப்பு நிலையங்கள் (TISC) கருத்திட்டங்களைத் தொடர்ந்தும் மேம்படுத்தி மற்றும் படைப்புக்களின் வணிகமயமாக்கத்தினை (commercialization) நோக்காகக் கொண்ட கருத்திட்டம் ஒன்றாக எதிர்காலப் பயணம் ஒன்றினை எதிர்பார்க்கின்றன. மேற்படி நோக்குடன் கருத்திட்ட

அறிக்கையில் திருத்தம் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. புதிதாக 04 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 04 தாபனங்களுடன் கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

- **புலமைச் சொத்து வசதிளை வழங்குவதற்காக கருத்திட்டம் எனப்படும் "Enabling Intellectual Property Environment Project"**

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் மூலம் உருவாக்கப்படும் புத்தாக்கங்களை வணிகமயமாக்குவதற்கு தேவையான கொள்ளளவு விருத்தியினை நோக்காகக் கொண்டு 2016 ஆம் ஆண்டில் உலக புலமைச் சொத்துக்கள் அமைப்புடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டன. அதன் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆக்கவுரிமை அறிக்கைகளை வரையும் 02 செயலமர்வுகள் மற்றும் ஆக்கவுரிமையின் முன்னைய கலைகளைப் பரீட்சிக்கும் செயலமர்வுகளின் மூலம் ஆக்கவுரிமைப் பரீட்சகர்களின் அவ்வாறே ஆராய்ச்சியாளர்களினதும் கொள்ளளவு விருத்திக்காக சிறந்த பங்களிப்பு ஒன்றினை வழங்கி உள்ளது. புத்தாக்கங்களை வணிகமயமாக்கலுக்கு உட்படுத்தும் வசதிகளை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட தொழில்நுட்ப ஒப்படைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (05), புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள் (06) மற்றும் தொழில்நுட்ப ஒப்படை ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் (05) என்பன இந்தக் கருத்திட்டத்தில் உறுப்புரிமை வகித்த பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பவற்றின் கொள்ளளவு விருத்தியில் விஷேட பங்கு ஆற்றியுள்ளன.

- தேசிய புலமைச் சொத்து அலுவலகம் 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆண்டறிக்கைகளுக்கான விருது வழங்கும் போட்டியில், 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைக்காக திணைக்களப் பிரிவின் கீழ் தங்க விருதைப் பெற்று முதலிடத்தை வெற்றி கொண்டதன் மூலம் மிகச் சிறந்து விளங்கியது.



2.5 சவால்கள்

- நாட்டில் நிலவிய குழப்பகரமான சூழ்நிலை காரணமாக உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக கடமைக்குச் சமூகமளிப்பதில் பிரச்சினைகள், சிரமங்கள் காணப்பட்டதுடன் மட்டுப்படுத்தப்பட்டோர் கடமைக்காக வரவழைக்கப்பட்டமை மற்றும் நிகழ்நிலை முறையில் வீட்டில் இருந்து கடமை நடவடிக்கைகளை மேற்கொண்டமை மூலம் சிறந்த சேவை ஒன்றினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வீட்டில் இருந்து கடமை நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனுடனும் மற்றும் சரியான முறையிலும் மேற்கொள்வதற்காக e- முறைமை ஒன்று (e-system) வியாபாரச் சின்னங்கள் பிரிவிடம் காணப்படாமை சவால் ஒன்றாக அமைந்ததுடன் மின்னஞ்சல் மற்றும் "எனி டெஸ்க்" முறையினைப் பயன்படுத்தி (Any Desk) வியாபாரச் சின்னங்கள் பிரிவின் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

- வியாபாரச் சின்னங்கள் பிரிவின் கோப்புக்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக போதியளவான பதிவேட்டறைகள் காணப்படாமை காரணமாக முறையான வகையில் களஞ்சியப்படுத்தும் பிரச்சினைகள் நிலவியதுடன் காலம் கடந்ததன் பின்னர் மீண்டும் புதுப்பிக்கப்படாத மற்றும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பதிவேட்டறையில் இருந்து அகற்றக் கூடிய கோப்புக்களை அகற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி குறிப்பிட்ட அளவில் பதிவேட்டறையில் இடவசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தாபனத்தின் பிரதான செயற்பாட்டுக் கடமைப் பொறுப்பு ஒன்றினை நிறைவேற்றும் வியாபாரச் சின்னங்கள் பிரிவிலும் மற்றும் ஆக்கவுரிமைகள் பிரிவிலும் ஏற்கனவே நிலவும் ஆளணி போதியதாக இல்லாமை.

- வியாபாரச் சின்னங்கள் பிரிவிற்கு மாதம் ஒன்றிற்கு கிட்டத்தட்ட 1000 வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவதுடன் வியாபாரச் சின்னங்களைப் பரீட்சித்தல், வியாபாரச் சின்னங்களைப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் மற்றும் அதற்கிடையிலான சிக்கலான நடைமுறையின் சகல பணிகளும் பணிப்பாளர் (சட்டம்), உதவிப் பணிப்பாளர்கள் (சட்டம்) மூன்று பேர், புலமைச் சொத்து உத்தியோகத்தர்கள் ஐந்து பேர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பன்னிரெண்டு பேர் மற்றும் அலுவலகப் பணியாளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் இரண்டு பேரினை உள்ளடக்கிய வரையருக்கப்பட்ட பதவியணி ஒன்றினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2.6 எதிர்கால இலக்குகள்

- ஆக்கவுரிமைப் பரீட்சிப்பு ஒன்று தொடர்பில் செலவிடப்படும் காலத்தை (புத்தாக்கம் தொடர்பான பரீட்சிப்பு) 08 மாத காலம் வரை குறைத்தல்.

- நிகழ்நிலை முறையில் விண்ணப்பங்களைக் கோப்பிடும் சந்தர்ப்பம் மற்றும் ஏனைய கோப்பிடல்களை நிகழ்நிலை முறையில் மேற்கொள்வதற்கான வசதிகளை பொதுமக்களுக்கு வழங்குதல்.

- உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பினால் (WIPO) நடைமுறைப்படுத்தப்படும் வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் வழிமுறை உள்ளடக்கப்பட்ட மெட்ரிட் சாசனத்திற்குள் பிரவேசித்தல்.

- புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான வசதிளை வழங்குதல்.

  புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்காக புலமைச் சொத்துச் சட்டத்தில் திருத்தம் (2022 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க) செய்தல் 2022 பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான ஒழுங்குவிதிகள், சட்ட வரைஞர் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்யும் வசதிகளை வழங்குவதற்கு இயலுமாகும்.

- வெளியீட்டு உரிமைகளுக்காக உரிமைத் தொகை செலுத்துவதனை தரப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.
  இதனை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால், அதனோடு தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த குழுவின் ஆய்வு அறிக்கை ஒன்று அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டு உள்ளதுடன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உரிமைத் தொகை செலுத்துவதனை தரப்படுத்துவதற்காக முன்வருதல்.

- வெளியீட்டு உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புறம்பான ஒரு பிரிவினைத் தாபித்தல். இதற்கான சாத்தியவள ஆய்வு 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தியாயம் 03 – ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றகை

3.(அ)	• புலமைச் சொத்து நிதியம்
3.(ஆ)	• தலைப்பு 299

3. (அ) ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை – புலமைச் சொத்து நிதியம்

3. (அ) 1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று – புலமைச்சொத்து நிதியம்

புலமைச் சொத்து நிதியம்

2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

	குறிப்புக்கள்	2022.12.31	2021.12.31
வருமானம்		ரூ.	ரூ.
வியாபாரச் சின்னங்களின் வருமானம்	3	69,809,906	70,271,480
ஆக்கவுரிமைகளின் வருமானம்	3	7,297,882	6,951,459
கைத்தொழில் வடிவமைப்புக்களின் வருமானம்	3	466,230	561,207
ஏனைய வருமானங்கள்	4	397,737	381,176
முதலீட்டு வட்டி வருமானங்கள்	5	161,614,335	43,062,272
மொத்த வருமானம்		**239,586,090**	**121,227,595**
செலவுகள்			
சம்பள ஊதியங்கள் மற்றும் ஊழியர் பயன் தொகைகள்	2	3,355,950	2,443,119
கொடைகள் மற்றும் ஏனைய பரிமாற்றுக் கொடுப்பனவுகள்	2	2,329,763	1,263,585
விநியோகங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	2	50,982,250	40,956,811
ஏனையவை	2	286,983	529,177
தேய்மானம் மற்றும் கடன்தீர் நிதி நிதிச் செலவு	2	8,064,032	7,212,801
மொத்தச் செலவுகள்		**65,018,978**	**52,405,494**
காலப்பகுதிக்கான மிகை/ (குறைபாடு) /வருமானம்		**174,567,112**	**68,822,100**

21 | Page

புலமைச் சொத்து நிதியம்

2022.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று

	குறிப்புக்கள்	2022.12.31	2021.12.31
		ரூ.	ரூ.
சொத்துக்கள்			
அசையும் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்கள்	8	9,246,872	2411,558
மீதமுள்ள எழுதுபொருட்களின் இருப்பு		5,419,136	-
கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள்	9	19,959,330	31,387,410
குறுகிய கால முதலீடுகள்	7	1,076,609,446	898,540,693
முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	11	311,519	5,345
		1,111,546,304	932,345,005
அசையாத சொத்துக்கள்			
சொத்து,பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்	6	28,966,553	31,460,226
கிடைக்கப்பெற வேண்டிய மீளளிப்புக்கள் – புலமைச் சொத்து விற்பனை ஊக்கவிப்பு நிலையங்கள்		22,298,751	22,298,751
மொத்த சொத்துக்கள்		51,265,304	53,758,977
		1,162,811,608	986,103,982
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
சேரல் செலவுகள்	12	3,262,384	3,816,701
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்		-	-
மொத்தப் பொறுப்புக்கள்		3,262,384	3,816,701
தேறிய சொத்துக்கள்		1,159,549,224	982,287,281
தேறிய சொத்துக்கள் / உரிமை முதல்			
திரண்ட மிகை / குறைபாடு	10	1,159,549,224	982,287,281
தேறிய சொத்துக்கள் / உரிமை முதல்		1,159,549,224	982,287,281

ஆர்.பீ.எஸ்.ராஜபக்ஷ
கணக்காளர்
R.P.S. Rajapaksha
Accountant
National Intellectual Property Office of Sri Lanka
"Samagam Madura", 3rd Floor,
400, D.R. Wijewardhana Mw, Colombo 10.

கீதாஞ்சலி ஆர்.ரணவக
புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி
Geethanjali R.Ranawaka
Director General of Intellectual Property
National Intellectual Property Office of Sri Lanka
"Samagam Medura", 3rd floor
No.400, D.R.Wijewardhana Mw.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அ.அ. சட்டத்தின் 154 ஆவது உறுப்புரையின் மூலம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள தத்துவங்களின் பிரகாரம் புலமைச் சொத்து நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்யும் பணிக்காக 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் 176 (5) ஆம் பிரிவிற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி நிதிக் கூற்று 2023.02.27 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது.

ஏ.எம்.பி.எம்.பீ. அத்தபத்து
செயலாளர்
வர்த்தக வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சகம்
2023-02-27

A. M. P. M. B. Atapattu
Secretary
Ministry of Trade, Commerce and
Food Security

20 |

புலமைச் சொத்து நிதியம்

2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான இணைந்த நிதிப் பாய்ச்சல் கூற்று

நேரடி முறைக்கு ஏற்ப நிதிப் பாய்ச்சல் கூற்று

	2022.12.31	2021.12.31
நடைமுறைச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்	**ரூ.**	**ரூ.**
வரவுகள்		
வரிகள்	3,600	2,925
பொருட்கள் மற்றும் செவைகளை விற்பனை செய்வதன் மூலம்	116,361,027	116,676,219
வட்டி வரவுகள்	173,042,415	20,504,224
ஏனைய வரவுகள்	711,520	782,372
கொடுப்பனவுகள்		
ஊழியர்களுக்கான செலவு	(3,351,958)	(2,469,733)
வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள்	(54,207,878)	(43,625,775)
ஏனைய கொடுப்பனவுகள்	(2,617,875)	(1,757,472)
நடைமுறைச் செயற்பாடுகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்	**229,940,852**	**90,112,760**
முதலீட்டு நடவடிக்கைகளால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்		
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	(6,098,664)	(3,628,840)
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் வருமானங்கள்	16,188	-
முதலீடுகள் காலம் பூர்த்தியடைவதனால் கிடைக்கும் வருமானங்கள்	3,712,934,284	895,641,676
முதலீடுகளைக் கொள்வனவு செய்தல்	(3,891,003,038)	(942,540,602)
முதலீட்டு நடவடிக்கைகளால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்	**(184,151,229)**	**(50,527,766))**
நிதிச் செயற்பாடுகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்		
குத்தகைப் பணத்தினை மீளச் செலுத்துதல்		-
அரசிற்கான பகிர்ந்தளிப்புக்கள்	(38,954,309)	(39,059,989)
நிதிச் செயற்பாடுகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்	**(38,954,309)**	**(39,059,989)**
காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்களின் தேறிய அதிகரிப்பு / (குறைவு)	6,835,314	525,005
2021.01.01 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்கள்	2,411,558	1,886,552
2022.12.31 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்கு சமனான விடயங்கள்	**9,246,872**	**2,411,558**

புலமைச் சொத்து நிதியம்

2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான உரிமை முதல் மாற்றமடைதல் தொடர்பான கூற்று

	வெளியிடப்பட்ட மூலதனம்	பிடித்து வைக்கப்பட்ட இலாபம்/ நட்டம்	மற்ற இருப்புக்கள்	மொத்தம்
	Rs.	Rs.	Rs.	Rs.
2021.01.01ஆம் திகதியன்று மீதி	909,874,631	-	-	909,874,631
முன்னைய வருடத்திற்கான சீராக்கல்கள்	-	3,590,550	-	3,590,550
மீள்மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம்	(5,578,250)	-	5,578,250	-
ஆண்டிற்கான தேறிய இலாபம்	-	68,822,100	-	68,822,100
2021.12.31 ஆம் திகதியன்று மீதி	**904,296,381**	**72,412,650**	**5,578,250**	**982,287,281**
2022.01.01 ஆம் திகதியன்று மீதி	976,709,031	-	5,578,250	982,287,281
முன்னைய வருடத்திற்கான சீராக்கல்கள்	-	2,694,381	-	2,694,831
மீள்மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம்	-	-	-	-
ஆண்டிற்கான தேறிய இலாபம்	-	174,567,112	-	174,567,112
2022.12.31ஆம் திகதியன்று மீதி	**976,709,031**	**177,261,943**	**5,578,250**	**1,159,549,224**

இறுதிக் கணக்கிற்கு ஏற்புடையதான கணக்குக் குறிப்புக்கள்

அடிப்படைக் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கூற்றுக்கள்

- 2022 சனவரி 01 தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதி மேற்படி நிதிக் கூற்றுக்களுக்கு உரிய அறிக்கையிடல் காலப்பகுதியாகும்.
- நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் அண்ணளவான ரூபாயில் முன்வைக்கப்பட்டு உள்ளது.
- இலங்கையின் அரச கணக்கீட்டுத் தரங்களுக்கு ஏற்ப கணக்குகள் தயாரிக்கப்பட்டு உள்ளன.
- நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும்போது வரலாற்று ரீதியான செலவுகள் எண்ணக்கரு அடிப்படையாகக் கொள்ளப்பட்டு உள்ளது . மேற்படி கணக்குகளைச் சமர்ப்பிக்கும்போது பணவீக்கத்திற்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.
- பௌதீக ரீதியானது ஒரே விதமானது மற்றும் ,தொடர்ச்சியாக நிலைபெறுதல் என்பவற்றின் சேரல் அடிப்படை தொடர்பான எண்ணக்கருவினை அடிப்படையாகக்கொண்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதுடன் அங்கு உரிய பொருத்தப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு உள்ளது.
- சொத்துக்களை தேய்மானம் செய்யும் கொள்கைகள்
- நிலையான சொத்துக்கள் நேர்கோட்டு தேய்மானத்தின் அடிப்படையில் சொத்தின் பயனுள்ள வாழ்நாளில் தேய்மானம் செய்யப்படுகின்றன.

சொத்துக்களை தேய்மானம் செய்யும் சதவிகிதம்.

அலுவலக உபகரணங்கள்	10%
அலுவலக பொருத்துதல்கள்	10%
தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	05%
மோட்டார் வாகனங்கள்	10%
திரைச் சீலைகள்	20%
ஏடுகள்	10%
கணினிகள்	25%

- முதலீடுகள் அவற்றின் முக மதிப்பு மற்றும் விலைக்குக் குறைவாகக் கணக்கிடப்படுகின்றன.
- சேரல் செலவுகள் 2023 பெப்புரவரி 23 ஆந்திகதி வரை கணக்கிடப்பட்டு உள்ளது.
- 31.12.2022 நிலவரப்படி, மீதமுள்ள எழுதுபொருட்களின் இருப்பு ரூ. 5,419,136.
- சேவைகளை வழங்குவதற்காக கணக்குகள் வருடத்திற்கு உரிய வகையில் கிடைக்கப்பெறும் வருமானம், கணக்குகள் வருடத்திற்கு உரிய வகையில் அடையாளம் காணப்படுவதுடன், முதலீடுகளுக்காகக் கிடைக்கப்பெறும் வருமானத்தினை காலத்திற்காக சமவிகித முறையொன்றிற்கு அமைய கணக்குகளில் சேர்க்கப்பட்டு உள்ளது.

- புலமைச் சொத்துக்கள் நிதியத்தினை நிருவகிக்கும் நடவடிக்கைகளுக்காக புலமைச் சொத்து அலுவலகத்தின் அலுவலர்களுக்கு செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் என்பன உட்பட அரசிறைச் செலவுகளுக்காக ரூ. 46,245,955 தொகை ஒதுக்கீட்டுச் செலவுகள் தலைப்பிலக்கம் 299 இன் கீழ் அரசினால் ஏற்கப்பட்டு உள்ளது.

- அப/15/0272/625/007 ஆம் இலக்க மற்றும் 2015.04.23 ஆந்திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் புலமைச் சொத்துக்கள் விற்பனை ஊக்குவிப்பு மத்திய நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகையினை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்காக அமைச்சரவை அனுமதி 2015.04.23 ஆந்திகதி கிடைக்கப்பெற்று உள்ளது. அதற்கு அமைய உரிய நிதியினை மீளளிப்பு செய்யுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

- புலமைச் சொத்து நிதியத்திற்கு எதிராக தொடரப்பட்ட எதுவித வழக்குகளும் இல்லை. புலமைச் சொத்து அலுவலகம் பிரதான இரண்டு சந்தர்ப்பங்களில் புலமைச் சொத்து விடயத்திற்கு உரிய வகையில் தரப்பினர் ஒருவராக பெயரிப்படும்.

  I. புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட புலமைச் சொத்து விடயத்துடன் தொடர்பான ஒரு - தரப்புத் தீர்மானங்களுக்கு,விஷேடமாக வியாபாரச் சின்னங்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்தல்.

  II. வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் தொடர்பான எதிர்ப்புக்களை முன்வைக்கும் போது புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதியினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் ஒன்றிற்கு எதிராக உரிய தரப்பினர்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தல்

- ஐந்தொகை தினத்திற்கு பின்னர் நிகழ்வுகள் இல்லை.
- தொடர்புடைய தரப்பினர்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை

3. (அ) 2. ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை

(ரூ.000)

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு		உண்மைச் செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், பூர்த்தி செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீடுகள் அளவில் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	75,302	75,302	65,018	86.3%
மூலதனம்	9,600	9,600	3,034	31.6%

3. (அ) 3. கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை

(ரூ.000)

கொடையினை வழங்கிய நிறுவனம்	கொடையின் நோக்கம்	கொடைத் தொகை
-	-	-

3. (அ) 4. நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை – தலைப்பு

(ரூ.000)

சொத்துக்களின் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 ஆம் திகதியன்று பொருட்கள் மதிப்பாய்வு அறிக்கைக்கு அமைய மீதி	31.12.2022 புதிய நிதி நிலைமை தொடர்பான அறிக்கைக்கு அமைய மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கீடு செய்யப்பட உள்ள	செயலாற்றுகையினை % இல் அறிக்கையிடுதல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்	-	-	-	-
9152	இயந்திர உபகரணங்கள் – நிதியம்	4,281	4,281	-	100%
9153	காணிகள்	-	-	-	-
9154	தொட்டு உணர முடியாத சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியில் விஞ்ஞானச் சொத்துக்கள்	-	-	-	-
9160	மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை	-	-	-	-
9180	குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்				

3. (அ) 5 கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை – புலமைச் சொத்து நிதியம்

ரீஏசீ/ஏ/ஐபிஓஎப்/எப்எஸ்/22/27

புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி,
இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்.

இலங்கை தேசிய புலமைச் சொத்து நிதியத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய புலமைச் சொத்து நிதியத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று மற்றும் மேற்படி தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் உரிமை முதல் மாற்றமடைதல் தொடர்பான கூற்று மற்றும் மேற்படி தினத்துடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்கள், சாராம்சம் செய்யப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய, 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குரிய அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டு உள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் அழுத்தம் தவிர்ந்த, நிதியத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை எடுத்துக் காட்டுகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் இறுதியில் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டு இருந்த செலவு ரூ. 6,330,865 தொகை பெறுமதியான சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே இ.அ.து.க.நி. 03 இன் பிரகாரம் குறித்த சொத்துக்களின் பயனுறுதி உள்ள வாழ்நாள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை மீண்டும் மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் சீர் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.கொ) இணங்கியொழுகும் வகையில் என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி கணக்காய்வு நியமங்களின் அடிப்படையிலான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டு உள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டு உள்ளேன் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் மற்றும் நிருவாகத்தினை மேற்கொள்ளும் தரப்பினர்களினதும் பொறுப்பு

மேற்படி நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகும் வகையில் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமாகும் வகையில் தேவைப்படும் உள்ளக நிருவாகங்களைக் தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தினைத் தொடர்ச்சியாகப் பேணும் ஆற்றலினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாவதுடன், முகாமைத்துவம், நிதியத்தினை தீர்த்துக் கட்டுவதற்கு எண்ணுவதாயின் அல்லது வேறு ஒரு மாற்று வழியும் இல்லாத சந்தர்ப்பத்தில் செயலாற்றுகைகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாயின் தவிர தொடர்ச்சியான பேணுதலின் அடிப்படையில் கணக்குகளில் சேர்த்தல் மற்றும் நிதியத்தினைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதனை மேற்கொள்ளல் என்பனவும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிருவாகத்தினை மேற்கொள்ளும் தரப்பினர்களினால் நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு வகிக்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலத்திற்குத் தேவையான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க இயலுமாகும் வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள்,சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணி வருதல் வேண்டும்.

1.4. நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவுகள் சார்ந்த வகையிலான பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையினை வழங்குதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான வகையில் உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இது எப்பொழுதும் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் அற்றதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதாக இல்லாமல் இருக்கும். மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், மேற்படி நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் அது பாதிப்புச் செலுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் நியாயத் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடன் இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினை வழங்கும் போது, மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுகள் சார்ந்த பொய்யான கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணும்போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறை ஒழுங்கு விதிகளை திட்டமிடுவதன் ஊடாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு, போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமையும். அளவுகள் சார் பொய்யான கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்திலும் பார்க்க மோசடிகளினால் ஏற்படும் தாக்கம் ஆதிக்கம் கூடியது என்பதுடன், ஏமாற்றுக் கூட்டுச்சக்தி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், உள்நோக்குடன் புறக்கணித்தல், அல்லது உள்ளக நிர்வாகங்களைப் புறக்கணித்தல் என்பன மோசடிகள் ஏற்படக் காரணங்களாக அமையும்.

- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகம் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான பேணல் தொடர்பாக போதியளவான உறுதியற்ற தன்மை ஒன்று காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்கான நிதியத்தின் தொடர்ச்சியான பேணல் தொடர்பான அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான ஏற்புடைய தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான உறுதியற்ற தன்மை உள்ளதாக நான் தீர்மானிப்பதாயின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், மேற்படி வெளிப்படுத்தல்கள் போதியதாக இல்லையாயின் எனது அபிப்பிராயத்தினை நிலை நிறுத்தச் செய்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான பேணல் பூர்த்தியடைய முடியும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பன மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன், அவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளது என்பது மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் என்பன தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினர்கள் அறிவூட்டப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (I) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது ஒத்தியங்குகின்றது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (I) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள தேவைப்பாட்டிற்கு ஏற்ப முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

3. செயலாற்றுகை மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகாமை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 01/2020 ஆம் இலக்க மற்றும் 2022 டிசம்பர் 20 ஆம் திகதிய மற்றும் 01/2020 (ii) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சேவையினை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணங்கள் அதிகரிக்கப்படாத சகல அரச நிறுவனங்களும் கட்டணங்களில் திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனினும், கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வதற்குத் தேவையான அனுமதியினைப் பெற்றுக்கொண்டு கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3.2 முதலீட்டு முகாமைத்துவம்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதியக் கணக்கில் தொடர்ச்சியான 4 மாதங்களுள் ரூ. 10 மில்லியன்கள் தொடக்கம் ரூ. 15 மில்லியன்களுக்கு இடைப்பட்ட வீச்சு ஒன்றில் மீதி ஒன்று நிலவியதுடன் மிகைத் தொகையினை பயனுறுதி உள்ள வகையில் ஈடுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3.3 செயலாற்றுகை

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 431 பேர் விண்ணப்பித்து இருந்ததுடன் 2023 ஏப்பிறல் 30 ஆம் திகதி ஆகும் போது அவற்றுள் 5 ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டு இருந்தது.

(ஆ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வியாபாரச் சின்னங்களைப் பதிவு செய்வதற்காக கிடைக்கப்பெற்ற 9465 விண்ணப்பங்களுள் 531 விண்ணப்பங்கள் அதாவது நூற்றிற்கு 5.6 விண்ணப்பங்கள் மாத்திரம் ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பரீட்சிப்புக்களுக்கு உட்படுத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

(இ) கடந்த வருடத்திற்கு உரிய வகையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 3640 வியாபாரச் சின்னங்களைப் பதிவு செய்தல்களில் 555 விண்ணப்பங்கள் 2011 ஆம் ஆண்டிற்கு முன் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் ஆகும் என்பதுடன், சட்டத்தின் 118 (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட திகதி முதல் 10 வருட காலம் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் ஆகையினால் வியாபாரச் சின்னங்களைப் பதிவு செய்யும் சந்தர்ப்பம் ஆகும் போதும் அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாகிக் காணப்பட்டது.

(ஈ) ஹேக் சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான 04 வருடங்களுக்குள் கருத்திட்ட ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு உள்ள போதிலும், மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் மூலம் இலங்கைக்கு ஏற்படும் சாதகமான நிலைமை தொடர்பில் சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என அடையாளம் காணப்பட்டு இருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ) நிதியத்தின் மொத்த வருமானம் ஆகிய ரூ. 239,586,090 தொகையில் ரூ. 161,614,335 தொகை அதாவது நூற்றிற்கு 67 வீத தொகை முதலீட்டு வட்டி வருமானமாகக் காணப்பட்டது.

3.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 15.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள நிதி ஒழுங்குவிதி 877 இன் (2) (உ) இன் பிரகாரம் நிதி ஆண்டு பூர்த்தி அடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனினும் 2023 ஏப்பிறல் 30 ஆம் திகதி ஆகும் போது 2019 ஆம் ஆண்டிற்கு உரிய செயலாற்றுகை அறிக்கை மாத்திரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது.

3.5 ஏனைய விடயங்கள்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) காணியின் உரித்தினை சுவீகரித்துக் கொள்ளாமல் புலமைச் சொத்து விற்பனை ஊக்குவிப்பு நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக ரூ. 22,298,751 தொகை பணம் செலவிடப்பட்டு இருக்கும் போது அது சார்ந்த காணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்டு இருந்தன. மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட நிதியினை, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் தீர்த்து வைத்துக் கொள்வதற்கு இயலாமல் சென்றிருந்தது.


(ஆ) 2019 ஆம் ஆண்டில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டு இருந்த ரூ. 273,083 தொகை பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை.

(இ) புவியியல் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான ஒழுங்குவிதிகள் அனுமதிக்கப்பட்டு இருக்காமையின் காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் மேற்படி விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

டபிள்யு.பி.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்.

3. (ஆ) ஆண்டிற்குரிய மொத்த நிதிச் செயலாற்றுகை – தலைப்பு

3. (ஆ) 1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று – தலைப்பு 299



ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	திருத்தப்பட்ட 2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
47,645,000	திறைசேரி பணிமுற்பணங்கள்		46,540,000	42,940,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		77,846	22,475	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		4,951,624	5,246,604	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
47,645,000	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		51,569,470	48,209,079	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		51,569,470	48,209,079	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)				
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		51,569,470	48,209,079	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
47,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	46,245,955	44,401,355	
-	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	-	-	ஏசீஏ-2(ii)
500,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	404,900	407,787	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
48,000,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		46,650,855	44,809,142	
	மூலதனம் செலவினம்				
-	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	-	-	
	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	-	-	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
-	திறன் விருத்தி	14	-	-	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
-	மொத்த மூலதனம் செலவினம் (எ)		-	-	
	வைப்புக் கொடுப்பனவுகள்		77,846	22,475	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		5,028,701	5,363,000	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		5,106,546	5,385,475	
-	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		51,757,402	50,194,617	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(188,820)	(1,990,313)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(188,820)	(1,990,313)	ஏசீஏ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3
			-	-	

1

3. (ஆ) 2 நிதி நிலைமை தொடர்பான கூற்று –தலைப்பு - தலைப்பு 299

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	4,281,267	4,281,267
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	9,042,148	8,965,071
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		13,323,415	13,246,338
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		9,042,148	8,965,071
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		4,281,267	4,281,267
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		13,323,415	13,246,338

பக்க இலக்கம் 6 முதல் 30 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 31 முதல் 37 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ஏ.எம்.பி.எம்.பி.அத்தபத்து
பதவி : செயலாளர்
வர்த்தக வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

திகதி : 2023.02.27

A. M. P. M. B. Atapattu
Secretary
Ministry of Trade, Commerce and Food Security

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: கீதாஞ்சலி ஆர்.ரணவக
பதவி : புலமைச் சொத்துப் பணிப்பாளர் மா அதிபதி

திகதி : 2023.02.22

Geethanjali R.Ranawaka
Director General of Intellectual Property
National Intellectual Property Office of Sri Lanka
"Samagam Medura", 3rd floor
No.400, D.R.Wijewardhana Mw.
Colombo 10

பிரதான நிதி உத்தியோகத்தர்/. பிரதான கணக்காளர் /.
பணிப்பாளர்(நிதி)/.ஆணையாளர்(நிதி)
பெயர் : ஆர்.பி.எஸ்.ராஜபக்ஷ

திகதி : 2023.02.22

R.P.S. Rajapaksha
Accountant
National Intellectual Property Office of Sri Lanka
"Samagam Madura", 3rd Floor,
400, D.R. Wijewardhana Mw, Colombo 10.

3. (ஆ) 3 நிதிப் பாய்ச்சல் கூற்று – தலைப்பு 299

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	திருத்தப்பட்ட
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	2,608,066	2,521,351
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	46,540,000	42,940,000
முற்பணங்களை அறவிடல்	5,299,791	4,785,936
வைப்புக்களின் பெறுகை	77,846	22,475
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**54,525,703**	**50,269,762**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	46,117,455	44,374,635
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	404,900	407,787
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	2,896,028	97,090
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	888	4,775
முற்பணக் கொடுப்பனவு	5,028,585	5,363,000
வைப்புக் கொடுப்பனவு	77,846	22,475
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**54,525,703**	**50,269,762**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	-	-
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	-	-
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	-	-
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3. (ஆ) 4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் – தலைப்பு 299

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2022 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2022 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

7) **நிதிக் கூற்றுக்களுக்கான படிவங்களில் மாற்றங்களும் ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களை சரிசெய்தலும்**

2022 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு அமைவாக 2021 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுரீதியான புள்ளிவிபரங்களில் மாற்றங்கள் செய்யப்பட் டுள்ளன.

5

3. (ஆ) 5 கணக்காய்வு அறிக்கை – தலைப்பு – 299

ரீஏசீ/ஏ/ஐபிஓ/எப்எஸ்/22/32

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்.

தலைப்பு – 299 இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் சாராம்ச அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று, அத்தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று என்பவற்றினை உள்ளடக்கிய 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும் மேற்படி நிதிக் கூற்று தொடர்பான எனது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானிப்புக்கள் என்பன இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளன. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்களின் மூலம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் வருடத்திற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கைக் கணக்காய்வுத் தரப்படுத்தல்களுக்கு (இ.க.கொ) இணங்கி ஒழுகும் வகையில் என்னால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அறிக்கையின் நிதிக்

கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டு உள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியதாக உள்ளன மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கை ஆகும்.

1.2 நிதிக் கூற்று தொடர்பாக தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்கி ஒழுகும் வகையிலும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகும் வகையிலும் உண்மையானதும் மற்றும் நியாயமானதுமான நிலைமை ஒன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுகள் சார் பிறழ் கூற்றுக்கள் இன்றிய வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க இயலுமாகும் வகையில் தேவைப்படும் உள்ளக நிருவாகத்தினைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலத்திற்குத் தேவையான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க இயலுமாகும் வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணி வருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதி நிருவாகத்திற்காக உற்பத்தித்திறன் மிக்க உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்துப் பேணி வருதல் தொடர்பாக கணக்கெடுப்பு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் உற்பத்தித்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை உற்பத்தித்திறன் மிக்க முறையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

1.3 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவுகள் சார்ந்த வகையிலான பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையினை வழங்குதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான வகையில் உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இது எப்பொழுதும் அளவுகள் சார்ந்த பிறழ் கூற்றுக்கள் அற்றதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதாக இல்லாமல் இருக்கும். மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அளவுகள் சார்ந்த பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், மேற்படி நிதிக் கூற்றுக்களை

அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் தொடர்பில் ஏற்படும் பாதிப்பின் மீது தங்கியுள்ளது.

கணக்காய்வின் போது, இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதி ஒன்று என்ற வகையில் என்னால் தொழில்சார் ரீதியிலான தீர்ப்பு மற்றும் தொழில்சார் சிக்கனத்தன்மை என்பவற்றுடன் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவுகள் சார்ந்த பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணும்போதும் மற்றும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறை ஒழுங்கு விதிகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் அளவு சார் பிறழ் கூற்று ஒன்றினால் ஏற்படும் பாதிப்பினை விடவும் மோசடி ஒன்று காரணமாக ஏற்படும் பாதிப்பு வலிமை கூடியதாக அமைவது, கூட்டுச்சதி,போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல்,தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக நிருவாகங்களைத் தவிர்த்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக நிருவாகம் தொடர்பான தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளதா என மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான வகையிலும் மற்றும் நியாயமான வகையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்புக்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுத் தேடல்கள் பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் என்பன தொடர்பாக கணக்கெடுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

1.4 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6 (ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ). நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்தியங்குகின்றது எனவும்,

(ஆ). கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டு இருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன.

2. செயற்பாட்டு மீளாய்வு

2.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வியாபாரச் சின்னங்களைப் பதிவு செய்தல் 3643 மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் மேற்படி பதிவு செய்தல்கள், விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட வருடங்களுக்கு ஏற்ப வகைப்படுத்தி இருக்காமை காரணமாக ஆண்டிற்குள் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் மேற்படி ஆண்டிற்குள்ளேயே பதிவு செய்யப்படுவது இல்லை என்பது செயலாற்றுகை அறிக்கையின் மூலம் எடுத்துக் காட்டப்படவில்லை.

2.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தில் இருந்து சேர்வர் இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்காக 2016 டிசம்பர் 31 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு இருந்ததுடன் சேவைத் தவணைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய ரூ.மி. 7.5 தொகையும் உள்ளடங்கிய கைச்சாத்திடப்பட்ட தொகை ஆகிய ரூ. 32.5 மில்லியன் தொகை குறிப்பிட்ட தினத்திலேயே செலுத்தப்பட்டு இருந்தது. எனினும் இந்த ஒப்பந்தத்தை ICTA நிறுவனம் மீறி இருந்ததுடன் 2020 பெப்ரவரி 20 ஆம் திகதிய மற்றும் அப/20/0139/215/009 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் மீண்டும் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவ்வாறு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு இருக்கவில்லை. அதன் பின்னர் 2022 டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைய Cloud Server (LGS) கட்டமைப்பினை மென்பொருட்களுடன் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட இருந்த போதிலும், அது நிலவும் கட்டமைப்புடன் பொருந்துவதில்லை ஆகையினால் வேறு பொருத்தமான மாற்றுவழி ஒன்றினை மேற்கொள்ளல் பொருத்தமானது என 2023 மார்ச் 27 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் ICTA நிறுவனம் அறிவித்து இருந்தது.

3. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதன் செயலாற்றுகை

அடையாளம் காணப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதன் செயலாற்றுகையினை அளவிடுவதற்கு அடிப்படையாக அமைந்த வருடம் ஒன்று மற்றும் மேற்படி வருடத்தில் நிலவிய நிலைமையினை அடிப்படையாகக் கொண்ட தரவுகள் என்ற வகையில் அடையாளம் காண்பதுவும் இலக்கினை அடைந்து கொள்ள வேண்டிய இடங்கள் மற்றும் செயலாற்றுகையினை அளவிடும் குறிகாட்டிகள் என்பவற்றை தெளிவாக அடையாளம் காணல் என்பனவும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட செயலாற்றுகை நூற்றிற்கு 0, நூற்றிற்கு 65 மற்றும் நூற்றிற்கு 75 என்ற வகையில் பயன்தொகை மட்டம் வருடாந்த செயலாற்றுகைக் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் மேற்படி செயலாற்றுகைப் பெறுமதிகளின் சீரான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இயலாமல் இருந்தது.

4. நல்லாட்சி

4.1 உள்ளகக் கணக்காய்வு

அனுமதிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 4 வருட காலமாக வெற்றிடம் நிலவியதுடன் , 2022 ஒக்டோபர் 17 ஆம் திகதி தொடக்கம் கடமையினைத் தழுவும் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருந்தார்.

5 மனித வள முகாமைத்துவம்

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

(அ) அனுமதிக்கப்பட்ட 10 ஆக்கவுரிமைகள் பரீட்சகர் பதவிகளுள், 09 பதவிகள் 6 வருட காலமாக வெற்றிடம் நிலவியதுடன் மேற்படி பதவிகளுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்து உள்ள போதிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அது பயனுறுதியற்றுக் காணப்பட்டது.

(ஆ) 21 புலமைச் சொத்து உத்தியோகத்தர் பதவிகள் அனுமதிக்கப்பட்டுக் காணப்பட்ட போதிலும், அடுத்து வந்த காலத்தில் பதவியினை வகிப்பவருக்கு பிரத்தியேகமான முறையில் 10 பதவிகள் அனுமதிக்கப்பட்டு இருந்தன. தற்போதாகும் போது அதில் 05 பதவிகள் வெற்றிடமாகி இருந்தன. மேற்படி நிலைமை வியாபாரச் சின்னங்கள் பிரிவின் செயலாற்றுகை குறைவடைவதற்கு காரணமாய் இருந்தது.

பீ.ஜீ.ஐ. நிரஞ்ஜா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பில்

3. (ஆ) 6. ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை – தலைப்பு

அட்டவணை - 13 : ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை

(ரூ.000)

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு		உண்மைச் செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், பூர்த்தி செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீடுகள் அளவில் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	48,000	48,000	46,651	97.19%
மூலதனம்	0	0	0	0

3. (ஆ) 7 கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை – தலைப்பு

அட்டவணை - 14 : கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை

(ரூ.000)

கொடையினை வழங்கிய நிறுவனம்	கொடையின் நோக்கம்	கொடைத் தொகை
-	-	-

3. (ஆ) 8 நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை – தலைப்பு

அட்டவணை - 15 : நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

(ரூ.000)

சொத்துக்களின் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 ஆம் திகதியன்று பொருட்கள் மதிப்பாய்வு அறிக்கைக்கு அமைய மீதி	31.12.2022 புதிய நிதி நிலைமை தொடர்பான அறிக்கைக்கு அமைய மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கீடு செய்யப்பட உள்ள	செயலாற்றுகையினை % இல் அறிக்கையிடுதல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்	-	-	-	-
9152	இயந்திர உபகரணங்கள்	-	-	-	-
9153	காணிகள்	-	-	-	-
9154	தொட்டு உணர முடியாத சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியில் விஞ்ஞானச் சொத்துக்கள்	-	-	-	-
9160	மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை	-	-	-	-
9180	குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்				

அத்தியாயம் 04 – செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

அட்டவணை - 16 : தாபனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

	விஷேடமான குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட விளைவளவு	உண்மையான விளைவளவு	எதிர்பார்க்கப்பட்ட விளைவளவின் சதவீதமாக (%) உண்மையான விளைவளவு	100%-90%	75%-89%	50%-74%
வியாபாரச் சின்னங்கள்	கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை	10073	9466	94%	√		
	பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	10073	6414	64%			√
	வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	9795	5788	59%			√
	பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	7450	3643	49%			√
ஆக்கவுரிமைகள்	கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை	575	431	75%		√	
	பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	960	1211	126%	√		
	வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	200	246	123%	√		
	ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	200	189	95%	√		
கைத்தொழில் வடிவமைப்புக்கள்	கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை	250	159	64%			√
	பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	250	151	60%			√
	வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	150	176	117%	√		
	பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	150	96	64%			√

அத்தியாயம் 05 - நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

